சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

# Case No. OS.201/2023

2024ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 09ம் நாள் வெள்ளிக்கிழமை

வாதி தரப்பு சாட்சியாகிய **வா.சா.1**-இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திருமதி.வெ.லட்சுமி, எழுத்தர் நிலை 2 என்பவரால் பிரமாணம் செய்விக்கப் பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குமரேசன் | தொழில் | நெசவு |
| தந்தை பெயர் | தேவராஜ் | ஜாதி | |
| கிராமம் | ஒண்ணுபுரம் | சமயம் | |
| தாலுக்கா | ஆரணி | வயது | |

**09.08.2024** முதல் விசாரணை

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். பிரதிவாதிக்கெதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு பற்றிய முழு விவரம் எனக்குத் தெரியும். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான். என் தரப்பு சான்றாவணங்களாக, 06.12.2020தேதியிட்ட ரூ.1,25,000/-த்திற்கான அசல் கடனுறுதிச்சீட்டு **வா.சா.ஆ.1,** 30.09.2023 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு நகல் **வா.சா.ஆ.2,** அஞ்சலக ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.3,** ஆதார் அட்டை அசல் ஆவணத்துடன் சரி பார்க்கப்பட்டு நகல் **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப் படுகிறது. தாக்கல் செய்கிறேன். வழக்கில் கோரியுள்ளவாறு தீர்ப்பு பிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.